குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.90/2020

அ.சா.2

2025–ம் ஆண்டு நவம்பர் 11–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முகமது ஷபி | தொழில் | |
| தந்தை பெயர் | அப்துல் நபி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.07 மணி,

Accused Mathalaimuthu present. Advocate Mr.Sabarinathan present for Advocate Mr.Balasubramanian for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஓமலூர் ஊமைமாரியம்மன் கோயில் தெருவில் குடியிருந்து, தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் ஓமலூர் – மேட்டூர் சாலையில் உள்ள பி.பி.எஸ் காம்ப்ளக்ஸ்க்கு எதிரே கால்நடை மருத்துவமனைக்கு அருகே பிரியாணி கடை நடத்தி வந்தேன்.

2. கடந்த 20.09.2019 ஆம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் சம்பத் என்பவர் காக்கி நிற சட்டை அணிந்துகொண்டு, வீட்டிற்கு செல்வதற்காக ஓமலூர் – மேட்டூர் சாலையில் மேட்டூர் நோக்கி நடந்து சென்றார். அப்போது மேட்டூரிலிருந்து ஓமலூர் நோக்கி இருசக்கர வாகனம் வந்து சம்பத் மீது மோதிவிட்டது. நானும், அருகில் இருந்தவர்களும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை விசாரித்தபோது, அந்த நபர் ஆர்.சி.செட்டிப்பட்டியை சேர்ந்த மதலைமுத்து என்று சொன்னார். சம்பத்திற்கு தலை மற்றும் காலில் அடிப்பட்டுவிட்டது.

3. அருகிலிருந்தவர்கள் அவரது பேரன் ஹரியை அழைத்தார்கள். அவர், சம்பத்தை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் பதிவெண் 1697 ஜுபிடர் வாகனம் ஆகும். ஆஜர்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.11.11 17:31:29 +0530

எதிரிதான் சம்பவத்தின்போது, விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார். பி.பி.எஸ் காம்ப்ளக்ஸிற்கு அருகே விபத்து நடந்தது. விபத்திற்கு அதிவேகமாக இருசக்கர வாகனம் வந்ததா என்று எனக்கு தெரியவில்லை. போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.13 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.11 17:31:32 +0530